# பெரும்பாலர் பேசும் மொழி எது?

## இந்தியா? உர்துவா?

### இந்திக்கும் உர்துவுக்கும் பெரிய வேற்றுமையுண்டு.

### இந்தியைப்புகுத்துவது பார்ப்பனீயத்தை வளர்க்கவே.

## கோவை ஜனாப் கெ-எம்-ஹனீப் முழக்கம்.

இன்று இவ்விந்திய தேசத்தில் உர்து பாஷைக்கு இருக்கும் சிறப்பு யாவரும் அறிந்தோர் உண்மை விஷயமாகும். ஆனால் உர்து பாஷையின் கர்த்தாக்கள் முஸ்லிம் சகோதரர்கள் என்கின்ற காரணத்தால் காங்கரஸ்காரர்கள் உர்து மொழியை இவ்விந்தியாவிலிருந்து அறவே ஒழித்து அதற்குப் பதிலாக பல ஜாதி, பல பிரிவு, உயர்வு, தாழ்வு, ஆண்டான், அடிமை பார்ப்பனனுக்குச் சாதகமான பல விஷயங்களைத் தன்னுள் கொண்டிலங்கும் இந்தி எனும் லம்பாடி பாஷையை இந்தியர்கள் கற்றால் இந்திய சுயராஜ்யம் அடைந்துவிடும், வறுமை தொலையும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும், என்பன போன்ற காரணமற்ற காரியங்கள் கூறி மக்களை இந்தி கற்பிக்க—கற்கத் தூண்டி வருகின்றார்கள். இதற்காகப் பலருக்குப் பணம் கொடுத்து பிரச்சாரம் செய்வித்தும் வருகின்றனர். இன்று இந்தியாவிற்குப் பொது பாஷையாயிருக்கும் மொழி எது என ஆராயுங்கால் உர்து மொழியே இந்தியாவின் பொது பாஷை என்பது தெள்ளிதில் விளங்கும். எங்ஙனமெனில் இன்று இந்தியாவில் நடத்தப்பட்டுவரும் பத்திரிகைகளில் இந்தி, உர்து பத்திரிகைகளில் எந்த பாஷை பத்திரிகைகள் அதிகம் என்பதைக் கணக்கு எடுத்தால் போதுமானது.

### ஹிட்லர் தர்பார்.

அங்ஙனம் கணக்கெடுத்தால் உருதுபாஷை பத்திரிக்கைகள் 100 இருக்குமானால் இந்தி பத்திரிக்கை 25 ஆவது இருக்காது இல்லை என்று தெற்றென அறிகின்றோம். பொதுஜன வாக்கைத் தான் ஏற்போம் எனக் கூறும் இவர்கள் பெரும் பான்மையானவர்கள் (இந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள், சீக்குகள், முதலிய யாவர்களும்) எந்த பாஷையை நடை முறையில் கையாண்டு வருகின்றார்கள் என்பதை அறிந்து அம்மொழியைத் தான் பொதுபாஷை ஆக்க முயற்சித்தல் வேண்டும். அப்படிக்கின்றி சில பார்ப்பனர்களுக்கு மட்டும் பயன் பட்டு மற்ற எல்லா பார்ப்பனர்கள் அல்லாத மக்களுக்கும் பலன் அற்ற இந்தியைக் கட்டாயம் கற்றே ஆக வேண்டும் எனக் காங்கரஸ் வாதிகள் கூறுவார்களானால் அது நியாயமற்ற, யோக்யப் பொறுப்பற்ற, ஹிட்லர் தர்பாரே ஆகும் எனச் சொல்லுதல் குற்றம் ஆகுமா எனக் கேட்கின்றோம்.

---

தேச சங்கத்தில் நடைபெறும் முறைகளை இங்கும் கைக்கொள்ள வேண்டும். இவ்வாறு நடைபெற்றாலே; தலைவருக்காக மாத்திர மன்றி அறிவுடன் ஆராய்ச்சி செய்து, பிரதிநிதிகள் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ள முடியுமென்பது எமது கருத்து.

---

### ராஜேந்திரர்— அப்துல் ஹக் ஒப்பந்தம்.

இந்தி, உர்து விவாதம் ஒழிய வேண்டுமென்ற ஆவலில் சமீபத்தில் பாபு ராஜேந்திர பிரசாதுக்கும், புரொபஷர் அப்துல் ஹக் அவர்களுக்கும் ஒரு ஒற்றுமையான ஒப்பந்தம் ஏற்பட்டதாகக் காங்கரஸ் பத்திரிக்கைகளில் கண்டேன். "பாஷையின் பெயர் இந்துஸ்தானி" என்றழைக்கப்படல் வேண்டும். முஸ்லிம்களுக்குஉர்து லிபியும்இந்துக்களுக்குதேவநாகரிலிபியும் வழக்கத்தில் கொண்டுவரவேண்டும் என்பது தான் இவ்விருவரின் ஒப்பந்தசாரமாகும். இதை வைத்துக்கொண்டு தான் நம் சென்னைச் சாணாக்கி முதன் மந்திரி சி. ராஜகோபாலாச்சாரியாரும் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தக்காரணம்.

மேற் சொன்ன ஒப்பந்தத்தின் அர்த்தம் யாது என இவ்விருவர்களுக்கு மட்டும் தான் புரிந்து கொள்ள முடியுமே அன்றி மற்றவர்களுக்கு அறிந்து கொள்ள முடியாது. உர்துவும், இந்தியும் தமிழ் மலையாள பாஷை போலாகும். தமிழுக்கும், மலையாளத்திற்கும் எழுத்து, வார்த்தை வித்தியாசம் எப்படியோ அப்படியே இந்திக்கும் உர்துவுக்குமுண்டு.

### உதாரணம்.

இதற்கோர்உதாரணம்காட்டுகிறேன். மனிதனுக்கும் மாட்டிற்குமுள்ள வித்தியாசமென்ன என்ற வார்த்தைக்கு உர்துவில் "காயே அவ்ர் இன்ஸான் மே கியா பர்க்ஹே" என்றும் இந்தியில் "பஸு அவர் மனுஷ்மேக் யாவித்யாஸ்ஹே" என்றும் கூறுவார்கள். இதிலிருந்தே இந்தி பாஷையில் சமஸ்கிருத வார்த்தைகள் அதிகமாய்ப்புகுத்தப்பட்டிருக்கிறதென்று தெரியவரும். ஆதலால் பிராமணர்கள் இதை அதிவேகமாய்ப் படித்து விடுவதுமன்றி, மூடநம்பிக்கை, குருட்டு பழக்க வழக்கங்கள் யாவும் இந்தியால் ஒழியாமல் இருந்தே வரும் என ஈ. வெ. இராமசாமி பெரியார் முதலியவர்கள் கூட கூறி வருவது உண்மையேயாகும் என்பது புலனாகிறது.

### இந்தி தமிழர்களை அடிமைப் படுத்தும்.

இப்போது இந்தியை இந்துஸ்தானி என்று பெயரிட்டு அழைத்து வருகின்றதன் காரணம் முஸ்லிம்களைச் சுலபமாக ஏமாற்றிவிடலாம் என்ற மனப்பால் குடித்ததன் காரணமேயாகும். இந்துஸ்தான் என்றால் இந்தியா என்பது பொருள். அவ்விந்தியா பாஷை தான் உர்து. அப்படியிருக்க இந்துஸ்தானி என்று சொல்கின்றார்களே காங்கரஸ்காரர்கள்? அதன் காரணமென்ன? இந்துஸ்தானி என்ற மற்றொரு பாஷையைச் சிருஷ்டிக்கப் போகின்றார்களா நம் காங்கரஸ் வீரர்கள்! 55 உயிர்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க.